22nd July 1964]

திரு. ப. உ. ஷண்முகம் : ஒருவருக்கு அடமானம் செய்து விட்டு மீண்டும் அதையே சர்க்கார் விலை கொடுத்து வாங்குவது சரியா? அடமானம் செய்யும் போதே அதைப்பற்றி யோசிக்க வேண்டாமா?

கனம் திரு. பூ. கக்கன் : சில அதிகாரிகள் செய்துவிட்டார்கள். அதை எவ்வாறு செய்ய வேண்டுமோ அவ்வாறு செய்ய அரசாங்கம் முன்வந்திருக்கிறார்கள்.

திரு. மா. இராசாங்கம் : சார், கனசேர்வைப் பட்டியில் . . .

MR. SPEAKER : No, let the hon. Member ask about Palayam.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது சாதி இந்துக்களுக்கு ஆட்சேபணை இருக்கிறதா என்று கேட்கப்படுகிறதா? அப்படி கேட்கவேண்டும் என்று ஆர்ஜிதம் செய்யும் அதிகாரிகளுக்கு அரசாங்கம் ரகசிய உத்தரவு போட்டிருப்பது உண்மையா?

கனம் திரு. பூ. கக்கன் : ஜாதி இந்துக்களுக்கு ஆட்சேபணை இருக்கிறதா என்று கேட்பதில்லை. ஆனால் பொதுவாக ஏதாவது ஆட்சேபணை இருக்கிறதா என்று பார்க்கிறோம்.

கூட்டுறவு முறையில் வீடுகட்டும் திட்டம்

*634 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் எத்தனை தாலூகாக்களில் கூட்டுறவு முறையில் வீடுகள் கட்டும் திட்டம் அமுலில் இருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன் : தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பன்னிரெண்டு வட்டங்களிலும் கூட்டுறவு முறையில் வீடுகள் கட்டும் திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், தலை நகரங்களில் கூட்டுறவு முறையில் வீடு கட்டும் திட்டம் இருக்கிறது. அதை கிராமப்புறங்களுக்கும் விஸ்தரிக்க ஆலோசிக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த ரூரல் கோவாப்பரேடிவ் ஹவுசிங் ஸ்கீம் பஞ்சாயத்திலே செய்யவேண்டும்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, இந்த ரூரல் ஹவுசிங் ஸ்கீம் கிராம நத்தம் புறம்போக்கில் வீடு கட்டுபவர்களுக்கு சரியான டைட்டில் கொடுக்க முடியாத சூழ்நிலை இருப்பதால்தான் "failure" ஆகிறது என்பதை அரசாங்கம் உணருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இத்தனை இடைஞ்சல்களும் இருந்துதான் அது எப்படியோ 'சக்சீட்' ஆகவேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இவ்வளவு இடைஞ்சலுக்கும் மத்தியில் சில சொசைட்டிகள் இயங்குவது ஆச்சரியம்தான். அதிலேகூட அவைகளுக்கு அறவே பணம் ஒதுக்குவது கிடை

22nd July 1964]

யாது. புது சொசைட்டிகள் ஆரம்பிப்பதற்கு முன் இருக்கிற சொசைட்டிகளுக்கு பணம் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 1964-65-க்கு இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அதை இப்பொழுது ஐந்து லட்சமாக உயர்த்தியிருக்கிறோம்.

திரு. சி. கொளந்தைசாமி கவுண்டர் : சார், மலைஜாதிகளுக்கு வீடு கட்ட ஒன்றரை வருஷமாக நானும் அலைந்து பார்க்கிறேன். பள்ளிக்கூடம் கட்ட கட்டிடம் கிடையாது. பனமரத்துப்பட்டி பக்கத்தில் இருக்கிற தும்பல்பட்டியிலே பள்ளிக்கூடத்துக்கு, பஞ்சாயத்து ஆபீசுக்கு, இதற்கு எல்லாம் கட்டிடம் கிடையாது. நானும் தாசில்தாரிடம், கலெக்டரிடம் சென்று சொல்லிப்பார்த்தாகி விட்டது. பார்க்கிறோம், பார்க்கிறோம் என்கிறார்களே தவிர, திட்டத்தை செய்யவில்லை. இது விஷயத்திலே சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது வீடு கட்டும் திட்டம். பஞ்சாயத்து ஆபீசு, பள்ளிக்கூடம் அது பற்றி என்னுடைய சகா மந்திரிக்கு கேள்வி போட்டால் அவர்கள் பதில் சொல்வார்கள்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, to implement the rules regarding the Rural Housing Scheme properly, will the Government come forward to simplify them and also not insist on the title deeds as is being done now?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, if the society is not satisfied about the title of the person who applies for a loan, then it will become difficult to recover the money from that person. Therefore, generally we insist on a proper title being proved in favour of the person who wants a loan.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : சபாநாயகர் அவர்களே, இப்பொழுது வீடு கட்டும் கூட்டுறவு சொசைட்டிகளுக்கு ஐந்து லட்சம் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கது. அநேக சங்கங்கள் பணம் இல்லாததால் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தை எப்பொழுது கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆர்.சி.எஸ். அவர்களுக்கு இவ்வளவு அளவுக்கு கடன் அப்ளிகேஷன்கள் வாங்கி அனுப்பும்படி உத்தரவு போட்டிருக்கிறோம்.

Employment to Scheduled Castes

*635 *Q.*—SRI S. MADHAVAN :
SRI M. KARUNANIDHI : } Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have taken steps to implement the recommendations of the Seminar on Employment of Scheduled Castes and Scheduled Tribes; and